**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

**Date : 25.09.2025**

**SC. 202/2022**

**அ.சா 13 – ரவிச்சந்திரன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், குருபரப்பள்ளி**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் நாள் **ரவிச்சந்திரன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ரவிச்சந்திரன்** | தந்தை பெயர் | சின்னராஜ் |
| வயது | 53 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது குருபரப்பள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தின் போது நான் சூளகிரி காவல் நிலையத்தில் , சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 12.02.2020 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சூளகிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதிராமராஜ் என்பவரின் வாய்மொழி உத்தரவு படி அன்றைய தினம் காலை 7.45 மணியைபோல் நான் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரித்த போது காயம்பட்ட சீனிவாசன் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் தெரிந்து , காவேரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சீனிவாசன் வயது 26 த/பெ கோவிந்தன் ,என்பவரை மருத்துவரிடன் உதவியுடன் விசாரித்து சீனிவாசன் வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலத்தை அன்றைய தினம் காலை 8.00 மணியைபோல் பதிவு

செய்து , பின்னர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு நிலையம் வந்து மேல் நடவடிக்காக புகார் வாக்குமூலத்தை காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா 1 சீனிவாசன் கொடுத்த வாய்மொழி புகார் வாக்குமூலத்தில் எதிரிகளில் 2 நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் முரளி என்பவர் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து விட்டதாக கூறினார். அதேபோல், மேற்படி 2 நபர்கள் பஜாஜ் பல்சர் வண்டியில் வந்ததாக கூறினார் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை 12.02.2020 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

**Date : 25.09.2025**

**SC. 202/2022**

**அ.சா 12 – ஸ்ரீராம ஜெயம்**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் நாள் **ஸ்ரீராம ஜெயம்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஸ்ரீராம ஜெயம்** | தந்தை பெயர் | ராதாகிருஷ்ணன் |
| வயது | 37 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது ஒசூர் காவேரி மருத்துவமனையில் அவசர மருத்துவ சிகிச்சையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 11.25 மணியளவில் சீனிவாசன் த/பெ கோவிந்தன் என்பவரை கேசவன் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பார்வையிட்டு விசாரித்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்னர் அவர் தன்னை தெரிந்த 2 நபர்கள் , 11.02.2020 ம் தேதி சுமார் இரவு 8.00 மணியைபோல் ஆருப்பள்ளி அருகில் சீனிவாசன் இரு சக்கர வாகனத்தில் சென்ற ெபோது மற்ற இரு சக்கர வானத்தில் வந்த 2 நபர்கள் கூர்மையான ஆயுதங்களால் தாக்கியதாக கூறினார். அவர் ஏற்கனவே ஒசூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்று விட்டு நான் பணி செய்யும் மருத்துவமனையான காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். பின்னர் அவரை பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. 10X3X3 செமீ ஆழமான வெட்டுகாயம் காயம் கழுத்தின் பின்பகுதியில் காணப்பட்டது. 2. வலது கை முட்டி சிராய்பு காயம் 3 X 2 செமீ அளவில் காணப்பட்டது. 3. வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயம் சுமார் 2 X 2 செமீ அளவில் காணப்ட்டது. அவரை 11.02.2020

அன்றைய தினமே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு பின்னர் 14.02.2020 ம் தேதி சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மேற்படி காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து காயச்சான்று வழங்கப்பட்டது. நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சீனிவாசன் என்பவரை கடந்த 11.02.2020 ம் தேதி தான் நான் பணிபுரியும் மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். அப்போது தான் அவரை பார்த்தேன். சீனிவாசன் எனது விசாரணையில் 2 தெரிந்த நபர்கள் இரு சக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்து தன்னை தாக்கி தள்ளிவிட்டதாக கூறியுள்ளார். அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை 05.06.2020 ம் தேதி போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்திலும் நான் சீனிவாசன் தாக்கிய எதிரிகளின் பெயர்களை பற்றி சொல்லவில்லை. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் கூறிய காயங்கள் அனைத்தும் ஒருவர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது நிலை தடுமாறி கீழே கூர்மையான கல் பகுதியில் விழுந்தால் கூட அவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்று எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி 2, 3 காயங்களாக சிராய்பு காயங்கள் ஏற்பட வாய்ய்புள்ளது என்றும் , 1 வது காயம் ஏற்பட வாய்பில்லை என்று தெரிவித்தார். போலிசார் என்னிடம் ஆயுதங்களை காட்டி விசாரிக்கவில்லை.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur